இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 26.05.2026

# குற்றத்தை மறைக்கும் விஜய் ஆட்சி!

போலீஸ் ராஜ்யம் நடத்தத் தொடங்கி இருக்கிறார் முதலமைச்சர் விஜய்.

‘கடைக்குப் போகிறேன்’ என்று ( 21 ஆம் தேதி) அனுப்பி வைக்கப்பட்ட சிறுமி அவர். காணவில்லை. அரைமணி நேரத்தில் அந்தக் குடும்பத்தினர் தேடுதலைத் தொடங்கி காவல்துறைக்குப் புகார் கொடுக்கிறார்கள். 22 ஆம் தேதி இரவு கண்ணம்பாளையம் குளக் கரையோரம் உள்ள முட்புதரில் சிறுமியின் உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அருகில் இருந்த தென்னந்தோப்பில் வைத்து கொலை செய்யப்பட்டுள்ளார் சிறுமி.

இதை அறிந்து ஆத்திரம் அடைந்த உறவினர்கள் சிங்காநல்லூர் மருத்துவமனை முன்பும், காவல் நிலையம் முன்பும் முற்றுகைப் போராட்டம் நடத்தினார்கள். சாலை மறியல் செய்தார்கள். சிறுமியின் உடலை வாங்க மாட்டோம் என்று பெற்றோரும் உறவினர்களும் சொன்னார்கள். இப்படி பொதுவெளியில் வெளிச்சம் ஆனபிறகுதான் காவல் துறை செயல்பட்டுள்ளது. குற்றவாளிகள் கைது செய்யப்பட்டார்கள். இந்தக் குற்றவாளிகளும் சிறுமியைத் தேடுவது போல நாடகம் ஆடி இருக்கிறார்கள். பின்னர்தான் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

**பெற்றோருக்குப் போன் செய்த காவல் துறை அதிகாரிகள், ‘சிறுமி உயிரோடுதான் இருக்கிறார்’ என்று முதலில் சொல்லி இருக்கிறார்கள். பின்னர், ‘சிறுமி இறந்து விட்டார்’ என்று சொல்லி இருக்கிறார்கள். காவல் துறையின் முதல் தவறு இது.**

இதன் உண்மை நிலையை விளக்க வேண்டும் என்று பெற்றோரும் உறவினர்களும் சாலை மறியல் செய்தார்கள். சிறுமியின் உடலை வாங்க மாட்டோம் என்று சொன்னார்கள். அதன்பிறகும் காவல் துறை அதிகாரிகள் தந்திரமாக நடந்துள்ளார்கள்.

**சிறுமியின் தந்தையை மட்டும் தனியாக அழைத்துச் சென்ற போலீசார் அவரிடம் மட்டும் பேசி இருக்கிறார்கள். “சிறுமியின் உடலை மருத்துவ மனையின் பின் வாசல் வழியாக எங்களுக்குத் தெரியாமல் ஊருக்கு அனுப்பி வைத்துள்ளனர். சிறுமியின் அப்பாவை தனியாக அழைத்துப் பேசி, தாய்க்குக் கூட தெரியாமல் உடலை அனுப்பி வைத்துள்ளார்கள்” என்று சிறுமியின் சித்தி பேட்டி அளித்துள்ளார்.**

தடயம் கிடைத்து விடக்கூடாது என்பதற்காக சடலத்தை எரித்துவிட்டதாக தாயார் குடும்பத்தினர் குற்றச்சாட்டு வைக்கிறார்கள். தனக்குத் தெரியாமல் தனது குழந்தையின் உடலை எரித்துவிட்டதாக சிறுமியின் தாயார் கதறு கிறார்.

**“உடற்கூறாய்வு முடிந்த பிறகு எனது மகளை என் கண்ணில் காட்டவில்லை. பின் வாசல் வழியாக ஆம்புலன்ஸ் மூலம் சொந்த ஊருக்குக் கொண்டு சென்று விட்டனர். வாடகைக்கு கார் பிடித்து நாங்கள் மேட்டூர் சென்றோம். எனது சம்மதம் இல்லாமல் என் குழந்தையின் உடலை எரித்து விட்டார்கள். நான் குழந்தையின் முகத்தைக் கூட பார்க்கவில்லை. சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதால் எரித்துவிட்டார்கள். நான் கையெழுத்துப் போட மாட்டேன் என்று சொன்ன பிறகு என் கணவரிடம் கையெழுத்து வாங்கி உடலை ஒப்படைத்துவிட்டார்கள். எதற்காக போலீஸார் இப்படிச் செய்தார்கள் எனத் தெரியவில்லை. நாங்கள் மேட்டூர் சென்றபோது என்னை அடிக்க வந்தனர். எங்களுக்கு பலர் மீதும் சந்தேகம் உள்ளது” என்று சொல்லி இருக்கிறார் சிறுமியின் தாய்.**

“தகவல் அறிந்து நாங்கள் மேட்டூர் சென்ற போது குழந்தையின் சடலம் எரிக்கப்பட்டு இருந்தது. அனைத்துச் சடங்குகளையும் எங்களுக்குத் தெரியாமல் முடித்து விட்டார்கள். சிறுமி கொலை தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் இருக்கிறது. நீதிமன்றத்தை நாட இருக்கிறோம். கோர்ட் உத்தரவுப்படி உடலைத் தோண்டி எடுக்கக் கூடாது என்பதற்காக எரித்துள்ளார்கள்” என்று சிறுமியின் சித்தி பேட்டி அளித்துள்ளார்.

**எதற்காக போலீஸ் இப்படி நடந்து கொள்ள வேண்டும்? பாதிக்கப்பட்டவர் பக்கம் நிற்பது தானே அரசு? இப்படிச் சொல்லி ஏமாற்றித்தானே வாக்கு களைப் பெற்றார் விஜய்? சிறுமியின் அம்மாவைப் பார்த்து, ‘இவரை மனநல மருத்துவமனையில் சேருங்கள்’ என்று ஒரு போலீஸ் அதிகாரி சொல்லி இருக்கிறார். இதுதான் பாதிக்கப்பட்டவருக்கு ஆறுதலாக இருக்கும் முறையா? பேட்டிக்கு முன்னதாக போலீஸ் அதிகாரிகள் சிரித்துக் கொண்டிருந்த காட்சியை ஊடகங்களில் பார்த்தோம். சிறுமிக்கு நடந்த கொடூரம் குறித்து கேட்டபோது, தொழில் துறை அமைச்சர் கீர்த்தனா சிரிக்கிறார். இதுதான் விஜய் ஆட்சியின் லட்சணம்.**

**இது உத்தரப்பிரதேச மாநிலத்தில் நடந்த ஒரு சம்பவத்தை நினைவூட்டுகிறது. 2020 அக்டோபர் மாதம் உத்திரப்பிரதேச மாநிலத்தில் ஒரு அப்பாவிப் பெண், நான்கு பேரால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டார். இறந்த அந்த பெண்ணின் உடலை அவர்களது குடும்பத்துக்குக் கூட காட்டாமல், தராமல் போலீஸே எரித்துவிட்டார்கள். அந்தப் பெண்ணின் தந்தையை கடத்தி வைத்துவிட்டு இதனை செய்திருக்கிறார்கள். கொலை செய்யப்பட்ட பெண்ணின் குடும்பத்தை யாரும் பார்க்க அனுமதிக்கவில்லை. அந்தப் பெண்ணின் குடும்பத்தை வீட்டுச் சிறையில் வைத்தார்கள். ஹத்ராஸ் பாலியல் வன்கொடுமை குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற கேரள பத்திரிக்கையாளர் சித்திக் காப்பான் கைது செய்யப்பட்டார். இப்படி ஒரு காட்சியைத் தான் தமிழ்நாட்டிலும் அரங்கேற்றி வருகிறார் முதலமைச்சர் விஜய்!**

●●

## ‘மேகதாது’ திட்டம்: அமைச்சரவையில் பங்கேற்றுள்ள

# தமிழ்நாடு காங்கிரஸ் தலையிட்டு தடுத்து நிறுத்தவேண்டும்!

### கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!



**சென்னை, மே 26 -**

**“த.வெ.க.வின் அமைச்சரவையில் காங்கிரஸ் அமைச்சர்கள் பங்கு கொண்டிருக்கும் நிலையில், காவிரிப் பிரச்சினையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலையிட்டு உடனடியாக மேகதாது திட்டத்தைத் தடுத்து நிறுத்தும் என நம்புகிறேன்” என தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி தெரிவித்தார்.**

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டப்படும் என கர்நாடக அரசு அறிவித்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது. மேற்கு மண்டலத்தில் தொடங்கி தஞ்சை டெல்டா வரை தமிழ்நாட்டில் பாதியை பாலைவனமாக்கத் துடிக்கும் கர்நாடக காங்கிரஸ் அரசின் திட்டத்தை, தி.மு.க. ஆட்சியிலிருந்த வரை தடுத்து நிறுத்தியது.

தற்போது, த.வெ.க.வின் அமைச் சரவையில் காங்கிரஸ் அமைச்சர்கள் பங்குகொண்டிருக்கும் நிலையில், காவிரிப் பிரச்சினையில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தலையிட்டு உடனடியாக அத்திட்டத்தைத் தடுத்து நிறுத்தும் என நம்புகிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

காவிரி நடுவர்மன்ற தீர்ப்பிற்கு எதிராக கர்நாடக அரசு, மேகதாதுவில் அணை கட்டுவதற்கான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

மேகதாது அணை பிரச்சினை தொடர்பாக கடந்த ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மறுசீராய்வு மனுவையும் உச்ச நீதிமன்றம் 24.05.2026 அன்று தள்ளுபடி செய்துள்ளது.

இந்நிலையில், “காவிரிப் பிரச்சினையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலையிட்டு உடனடியாக மேகதாது திட்டத்தைத் தடுத்து நிறுத்தும் என நம்புகிறேன்” என தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி தெரிவித்தார்.

## சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி – மகளிர் தொண்டர் அணி கலந்தாலோசனைக் கூட்டம்!

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

### மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர் பாபு ஆலோசனை வழங்கினார்!





*சென்னை, மே.26-*

*சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி மகளிர் தொண்டரணி கலந்தாலோசனை கூட்டம் 24-06-20026, ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, எண். 7. செல்லப்பா தெரு என்ற முகவரியில் மகளிர் அணி அமைப்பாளர் சுதா தினதயாளன் அவர்கள் தலைமையில், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் பி.கே.சேகர் பாபு கலந்து கொண்டு மகளிர் அணி நிர்வாகிகள் தற்போதைய சூழலில் எப்படி செயல்பட வேண்டும் என்றும்.. ஜுன் 3 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை சீரும் சிறப்புமாக கழகத் தலைவர் கூறிய படி ஏழை எளியவர்கள் பயனடையும் வகையில் நலத் திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.*

*இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

# பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்!

### முதல்வருக்கு – பிரேமலதா கோரிக்கை!

*சென்னை, மே.26-*

*பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய விஜய் தலைமையிலான அரசு இரும்புக்கரம் கொண்டு குற்றவாளிகளை அடக்க வேண்டும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.*

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: “விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே 11 வயது சிறுமி, 62 வயதுடைய முதியவரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவம் பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

*அதேபோல் அந்தோணி ராஜ் என்கிற விவசாயி தற்கொலை செய்து கொண்ட சம்பவமும், மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அருகே குபேந்திரன் என்கிற 17 வயது சிறுவன் முன் விரோதம் காரணமாக நள்ளிரவில் வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவமும் மக்களிடையே அச்சத்தையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.*

*மேலும் சென்னை ராயபுரத்தில் உள்ள ஆர்.எஸ்.ஆர்.எம் அரசு மருத்துவமனையில் பிறந்து 9 நாட்களே ஆன குழந்தை கடத்தப்பட்ட சம்பவமும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தொலைக்காட்சிகளை பார்த்தாலே கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை, குழந்தைகள் மீதான குற்றங்கள் போன்ற செய்திகள் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருப்பது தமிழகத்தின் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமை குறித்து மக்கள் மத்தியில் கடும் கவலையை உருவாக்கியுள்ளது.*

*சிறு குழந்தைகளின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்துள்ளேன்” என்று பெருமையோடு கூறும் முதல்வர் விஜய், பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக சட்டம் மற்றும் ஒழுங்கு, காவல்துறை நிர்வாகத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, குற்றச் சம்பவங்களைத் தடுக்கும் வகையில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.*

*பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய இந்த அரசு இரும்புக்கரம் கொண்டு குற்றவாளிகளை அடக்க வேண்டும் என தேமுதிக சார்பாக கேட்டுக் கொள்கிறோம். இல்லை என்றால், “கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்” செய்தால் பயனில்லை.” என்று பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.*

## மா.சுப்பிரமணியன் – தூத்துக்குடி ஜோயல் ஆலோசனை வழங்குகின்றனர்!

# சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா வேண்டுகோள்!

*சென்னை, மே26*

*சென்னை தெற்கு மாவட்ட அமைப்பாளர் ஏ.எம்.வி. பிரபாகர ராஜா விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :*

*சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி ஆலோசனைக் கூட்டம் இன்று (26-05-2025) மாலை 5:00 மணிக்கு சைதாப் பேட்டை பஜார் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி. பிரபாகர ராஜா எனது தலைமையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் முன்னிலையில் நடைபெறுகிறது.*

*இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் மா. சுப்பிரமணியன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் தூத்துக்குடி ஜோயல் ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்பிக்கின்றனர்.*

*இந்நிகழ்வில் சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணிக்கு உட்பட்ட பகுதி, ஒன்றிய அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள்: முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா. அண்மையில் அண்ணா அறிவாலயத்தில் கழக இளைஞரணிச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானம், கழக ஆக்கப் பணி குறித்து.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

## சென்னை தென்மேற்கு மாவட்ட

# கலை - இலக்கிய - பகுத்தறிவுப் பேரவைக் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் அறிக்கை!

*சென்னை, மே 26-*

*சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையிலும், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 28.05.2026 வியாழன் அன்று இரவு 7.00 மணியளவில் தியாகராய நகர், பாண்டிபஜார் பாலாஜி பவன் ஓட்டலில் மாவட்ட அவைத்தலைவர் மயிலை இரா.கா.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது.*

*இக்கூட்டத்தில் மாவட்ட துணைத் தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள்:*

*1) தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103-ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா குறித்தும்,*

*2) கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் செயல்முறைகள் குறித்தும்.*

*3) மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்தும்.*

*இவ்வாறு ச.சண்முகநாதன் தமது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.*



ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதியில் 3வது முறையாக வெற்றி பெற்ற கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் தனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டை பேரூர் மற்றும் முருக்கம்பாடி, கொங்கணாமூர், அத்தியந்தல், தேவரடியார்குப்பம், செல்லங்குப்பம், ஜம்பை, கே.சி.தாங்கல், பள்ளிச்சந்தல், மேட்டுச்சேரி, காங்கியனூர், மேலந்தல் ஆகிய ஊராட்சிகளில் பொதுமக்களை நேரில் சந்தித்து தனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்தமைக்கு நன்றி தெரிவித்தார்.